மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் நடத்தும் கூட்டங்கள், சந்தா தொகை செலுத்துதல், சேமிப்பு அவர்களுக்குள் கொடுத்துக் கொள்ளும் உட்கடன் விவரம், கடனை மீளச் செலுத்துதல் போன்ற நடைமுறைகளுக்கு பல்வேறு பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது. விவரங்களைப் பதிவேடுகளில் பதிவு செய்யவும், அவர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், தமிழ் மொழியில் சிறப்பு மென்பொருள் ஒன்று உருவாக்கி, கணினிமயமாக்கப்பட்ட கைபேசிகள் வழங்கப்படும் 'அம்மா கைபேசி திட்டம்' என்ற புதிய திட்டம் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முதற்கட்டமாக 20 ஆயிரம் சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அம்மா கைபேசிகளை எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வேளாண் உற்பத்தித் திட்டங்கள், நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம், மோட்டார் அல்லாத வாகனப் போக்குவரத்தை ஊக்குவித்தல், சென்னையில் ஒருங்கிணைந்த மேம்பாலங்கள், சோழிங்கநல்லூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு அம்மா கைபேசிகள்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மையினுடைய பெருமையைச் சொல்ல வந்த வள்ளுவப் பெருந்தகை,

> "உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
> தொழுதுஉண்டு பின்செல் பவர்"

என்றார். எனது தொழில் எது என்று கேட்டால், நான் விவசாயி என்று சொல்வதைப் பெருமையோடு சொல்லிக்கொள்வேன் என்று சொன்ன நம்முடைய போற்றுதலுக்குரிய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வேளாண்மை, குடிநீர், துப்புரவு, சுய உதவிக் குழு என பல்வேறு துறைகளுக்கு பல நூறு கோடி ரூபாய்களை, பல்லாயிரக்கணக்கான

கோடி ரூபாய்களை வாரி வழங்கி, தமிழகத்தை ஒட்டுமொத்தமாய் தூய்மையாக்குவதற்கு, பசுமைப் புரட்சியில் முன்னணி மாநிலமாக இந்த மாநிலத்தை உயர்த்துவதற்குத் தந்திருக்கிற திட்டங்களில், எதை எவ்வளவு குறுகிய காலத்தில் பாராட்டுவது என்று புரியவில்லை.

முற்பகல் 11–55

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நவீன தொழில்நுட்பத்தோடு விவசாயம் செய்வதற்கு பல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் கிராமத்திலே விவசாயிகள் சேற்றிலே இறங்கினால்தான், உழவன் சேற்றிலே கால் வைத்தால்தான், உலகத்தவர் சோற்றிலே கை வைக்கமுடியும் என்றிருந்தது. இன்றைக்குச் சேற்றிலே கால் வைக்காமலேயே விவசாயம் செய்வதற்கு நவீன தொழில்நுட்பக் கருவிகள், விஞ்ஞான வளர்ச்சியினால் வந்து கொண்டிருக்கின்றன. அந்த நவீன தொழில்நுட்பக் கருவிகளை தமிழகத்திலே கொண்டுவருவதற்கும், அதற்கும்மேலே நுண்ணீர்ப் பாசனத் திட்டத்திற்கு மானியம் தந்து, அதை மேம்படுத்துவதற்கும் அறிவித்திருக்கிறார்கள். இந்தியாவிலே மட்டுமல்ல; உலகிலே எந்த நாடாக இருந்தாலும், நோய் ஏதாவது தோன்றுகிறதென்றால், அது நீர் அல்லது அகற்றப்படாத குப்பை இவற்றினால்தான் இருக்கும் என்ற நிலையைக் கருத்திலே கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே பட்டி தொட்டிகளுக்கும், பல கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கும், அதேநேரத்தில், குப்பையை அகற்றுவதற்கும் வழிவகை செய்திருக்கிறார்கள். அதற்கும்மேலே, அந்தக் குப்பையை அகற்றுகின்ற பணியைச் செய்யும் அந்தத் தொழிலாளர்களுக்கு—தமிழகத்திலே இருக்கிற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு முழுக்கால் சட்டை வழங்கிட அறிவிப்பை வெளியிட்டதோடு, சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு 'அம்மா கைபேசி' தந்திடவும் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி), இப்படி எண்ணற்ற புதிய, புதிய திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு இந்த அவையிலே தந்திருக்கிறார்கள். அவற்றை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்; வாழ்த்தி நன்றிகூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்

திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று அரிய பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே இருக்கின்ற, குக்கிராமங்களிலே வசிக்கின்ற சாதாரண மக்கள் தங்குதடையில்லாமல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற்றிட, 4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை அறிவித்து, குடிநீர் தேவைப்படுகின்ற, கிராமப்புற மக்களினுடைய தாகத்தைத் தணித்த, ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்று, கிராமப்புற மக்களினுடைய வாழ்க்கைத் தரத்தை, வசதியை மேம்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணற்ற திட்டங்களை எந்த அளவுக்குத் தருகிறார்களோ, அதைப்போன்று இன்றைக்கு சென்னைப் பெருநகர மக்கள் பயனடைய எண்ணற்ற குடிநீர்த் திட்டங்கள், மேம்பாலங்கள் கட்டுவதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதோடு இன்னும் கூடுதலாக, மோட்டார் அல்லாத வாகனப் போக்குவரத்து, மிதி வண்டிகளுக்கு தனி பாதைகள், நடைபாதையில் பாதசாரிகளுக்கு அகலமான நடைபாதைகள் (மேசையைத் தட்டும் ஒலி) என புதிய திட்டங்களை இந்தியாவிலேயே முன்மாதிரி திட்டங்களாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள்.

அதுபோன்று, திடக் கழிவு மேலாண்மைப் பணிகளிலே புதிய அறிவிப்புகள். அதுபோன்று துப்புரவுப் பணியாளர்களுக்கான அறிவிப்பு. சுதந்திரம் பெற்று 67 ஆண்டுக் காலம் ஆகியும், அரைக்கால் சட்டையோடு துப்புரவுப் பணியைச் செய்து கொண்டிருக்கிற அந்தத் துப்புரவுப் பணியாளர்களுக்கு முழுக்கால் சட்டை வழங்கப்படும் என்று இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அலுவலகங்களிலே கோட்டு—சூட்டு போட்டுக்கொண்டு வேலை செய்கிற பெரிய அதிகாரிகளுக்கு இணையாக துப்புரவுப் பணியாளர்களையும் இந்தச் சமூகம் பார்க்க வேண்டுமென்பதற்காகவும், துப்புரவுப் பணியாளர்களுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று முழுக்கால் சட்டையை

துப்புரவுப் பணியாளர்களுக்கு வழங்கிட அறிவித்திருக்கிறார்கள். மனமகிழ் மன்றங்களிலே, கிளப்களிலே வேட்டி அணிந்து செல்வதே குற்றம் என்றிருந்த நிலையை மாற்றி, மனமகிழ் மன்றங்களுக்குள் தமிழன் வேட்டி அணிந்து செல்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை தந்தார்கள். இன்று துப்புரவுப் பணியாளர்களுக்கு முழுக்கால் சட்டையைத் தந்து மகிழ்வித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதுபோன்று, சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு கைபேசி. இதுவும் இந்தியாவிலேயே ஒரு புதிய திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியறிவு இல்லாமல் வறுமையிலே இருக்கிற, அறியாமையிலே இருக்கிற கிராமப்புற பெண்கள்கூட, கைபேசியை பெறுவதற்கான அறிவிப்பு; அதுவும் அம்மா வழங்குகிற கைபேசி என்றால், எவ்வளவு தரமாக இருக்கும்! (மேசையைத் தட்டும் ஒலி) நாம்கூட லேப் டாப் வாங்கினோம். இந்தியாவிலேயே, நம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் ஒரு தரமான மடிக் கணினியைத் தந்ததோடு, அதை இயக்குவதற்கான கம்ப்யூட்டர் பயிற்சியை நாமெல்லாம் பெறுவதற்கான வாய்ப்பையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள். அந்த வகையில், இப்போது கடைக்கோடியில் இருக்கிற, கிராமப்புறங்களிலே இருக்கிற, அறியாமையிலும், வறுமையிலும் வாழ்ந்து கொண்டிருக்கிற பெண் சமூகம் வாழ்க்கையில் நம்பிக்கையோடு வாழ வேண்டுமென்பதற்காக, ஒரு நவீன கைபேசியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருப்பதை மிகுந்து வரவேற்கிறேன்.

உழவர் குடியிலே, விவசாயிகளுக்கு ஏற்கெனவே வறட்சி நிவாரணம்; இந்தியாவில், உலகத்தில், எந்த நாட்டினுடைய அரசும் தராதபோது (மேசையைத் தட்டும் ஒலி) 1,000 கோடி ரூபாய் வறட்சி நிவாரணம் தந்து, விவசாயிகளினுடைய காவல் தெய்வமாய் இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு, ஏற்கெனவே நாம் நுண்ணீர்ப் பாசனத்திற்கு அளித்துவந்த 100 விழுக்காடு மானியத்தை மத்திய அரசு குறைத்தபோதும்கூட தொடர்ந்து வழங்கிட உத்தரவிட்டிருக்கிறார். “விவசாயிகளினுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு புரட்சித் தலைவி நான் இருக்கிறேன்” என்ற அடிப்படையில், மத்திய அரசு அந்த மானியத்தை குறைத்தபோதும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே அந்தச்

செலவையும் ஏற்றுக்கொண்டு, நுண்ணீர்ப் பாசனத் திட்டத்திற்கான இந்த மானியம் தொடரும், தொடரும் என்று அறிவித்து உழவர்களுடைய காவலனாக இருந்துகொண்டிருக்கிறார்கள்.

நண்பகல் 12–00

மனிதர்களுக்கு மட்டுமல்ல; கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும், வானத்தில் பறக்கின்ற பட்சிக்கும், சிந்தாமல், சிதறாமல் உணவளிக்கின்றவர் கடவுள் என்று சொல்வார்கள். அதுபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனிதர்களுக்கு மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தில் இருக்கிற ஜீவராசிகளுக்கு எல்லாம் சிந்தாமல், சிதறாமல் உணவளித்து, உயிர் காக்கிறார். அந்த வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரும்பெரும் திட்டங்களை வரவேற்று, நன்றி பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று துறைகளிலே விதி 110–ன்கீழ் தரமான திட்டங்களை மக்களுக்கு அளித்திருக்கிறார்கள்.

வேளாண்மைத் துறையில் உழவர்களை மேம்படுத்துகின்ற வகையிலே, 12 திட்டங்களை அறிவித்து பெருமை சேர்த்திருக்கிறார்கள். குறிப்பாக, நுண்ணீர்ப் பாசனத் திட்டத்திற்கான மானியம் என்று ஏற்கெனவே தமிழக அரசும், மத்திய அரசும் பணம் ஒதுக்கி, அதனை விவசாயிகள் பயன்படுத்தி வந்தார்கள். நமது மாநில அரசு ஏற்கெனவே, சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் வழங்கி வருகிறது. தற்போது, மத்திய அரசு அந்த மானியத்தை குறைத்த நிலையில், அவர்களுக்கான பணத்தை ஒதுக்காவிட்டாலும், “நான் இருக்கிறேன்” என்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுடைய நலனைக் கருதி, அந்த மானியத்தை முழுமையாக, தொடர்ந்து வழங்கிட அறிவித்திருப்பதை நான் உளமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால்,

விவசாயிகள் நிலத்திலே உழைத்தால்தான், நகரத்தில் இருப்பவர்கள் உணவு உண்ண முடியும் என்ற நிலை; இதை யாரும் மறுக்க முடியாது. அந்த அடிப்படையிலே, உழவர்களை, விவசாயிகளைப் பாதுகாக்கின்ற அரசாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு செயல்படுகிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, சென்னை நகரத்திலே பாதுகாப்பான குடிநீர் வழங்கிட வேண்டும்; சுகாதாரமான முறையிலே மக்கள் வாழ வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டம். குறிப்பாக, சென்னை மாநகரத்திற்கு பல்வேறு நகரங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்து தரக்கூடிய அரசு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதில் எந்தவித மாற்றமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டங்களை எப்படி எல்லாம் நிறைவேற்றிட வேண்டும் என்பதை அறிந்து, அந்த அடிப்படையில்தான் இன்றையதினம் புதிய, புதிய திட்டங்களை, மக்களுக்குத் தேவையான திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள மகளிர் பொருளாதார ரீதியாக வளர வேண்டும் என்ற நல்ல சிந்தனையோடும், இன்னும் புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'அம்மா கைபேசி திட்டத்தை' உருவாக்கி, இன்று அவர்களை ஊக்குவித்திருக்கின்றார். அந்த வகையிலே, மகளிரை மேலும் பொருளாதார ரீதியாக மேம்படுத்துகின்ற இதுபோன்ற திட்டங்களை எல்லாம் கொடுத்து, சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனமாரப் பாராட்டி மகிழ்கிறது; நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னை

ஒரு விவசாயி என்று சொல்லி பெருமைப்பட்டுக்கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை"

என்று வள்ளுவர் சொன்னார். எல்லாத் தொழிலும் உழவுத் தொழிலுக்குப் பின்னால்தான் என்பது இதன் பொருள்.

பொதுவாக ஜுன் 12 ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், 2011–ல் ஆட்சிக்கு வந்து, ஜுன் 6 ஆம் தேதியே மேட்டூர் அணையைத் திறந்து சாதனை படைத்ததால் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் ஒரு இலட்சம் டன் உணவு உற்பத்தியை அடைந்தது. அதனால், மத்திய அரசின் "கிரிஷி கர்மான்" விருதைப் பெற்றதோடு, இரண்டு கோடி ரூபாய் நிதியையும், தங்கப் பதக்கத்தையும் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் பயறு உற்பத்தியில் அதிக உற்பத்தியைப் பெற்றதால் இரண்டாவது முறையாக, 'கிரிஷி கர்மான்' விருதைப் பெற்று சாதனை படைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

அதேபோல், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு 2007–ல் பிப்ரவரி மாதம் வந்தது. அதனை மாண்புமிகு அம்மா அவர்கள், 2013, பிப்ரவரி 19 ஆம் தேதி மத்திய அரசிதழில் வெளியிட வைத்து, காவேரி டெல்டா மக்களின் வாழ்வாதாரத்தை நிலைநாட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், தஞ்சையிலே காவேரி டெல்டா மக்கள் ஒன்றுகூடி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு 'பொன்னியின் செல்வி' என்ற பட்டத்தை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் பசுமைப் புரட்சியை அறிவித்து, 'உற்பத்தி இரண்டு மடங்கு; லாபம் மும்மடங்கு' என்ற இலட்சியத்தோடு இன்றைக்கு வேளாண்மைத் துறையில் முத்தான 12 திட்டங்களை 630 கோடி ரூபாய் நிதியில் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

என்றான் வள்ளுவன். இயற்கை கெடுத்தாலும், வான்மழைபோல் விவசாயிகளைக் காப்பாற்றுகின்றவர் எங்கள் காவேரித் தாய்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் முழு நிலவாய் இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றார். விவசாயிகளினுடைய நம்பிக்கை நட்சத்திரமாய், விவசாயிகளுடைய உயர்வுக்கு அரணாக இருந்து வாழ்கின்ற தர்மத் தாய் அம்மா! அம்மா! மற்றவர்களெல்லாம் சும்மா, சும்மா என்று கூறி, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றிவரும் பகையைச் சுழன்றடித்தே வெற்றிகொள்ளும் கொற்றவையே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) கற்றவரும், மற்றவரும் கனிந்து தொழுதிட, கருணை மழையைப் பொழியும் பொற்தவமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) புன்னகை உருவாய், பூவுலகத் திருவாய், புதுமையின் வடிவாய், புதுயுகத்தின் விடிவாய், தமிழ் மண் ஆளும் மாதவமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

ரூபாய் 720 கோடி மதிப்பீட்டில் புதிய வீராணம் திட்டம் தந்து, சென்னை மாநகரின் தாகத்தை அன்றே தணித்து, தெய்வ மாமழையாய் விளங்குபவர் எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) 19 ஆயிரத்து 404 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகளை நிறைவேற்றி, தடையின்றி குடிநீர் வழங்கும் தெய்வீகத் தேன் மழை எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) "அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா விதைகள், அம்மா சிமெண்ட், அம்மா பரிசுப் பெட்டகம்" என மாண்புமிகு அம்மா அவர்கள் தந்த வரங்களின் வரிசையில் அம்மா கைபேசி வழங்கி மகளிர் சுய உதவிக் குழுக்களின் குலச்சாமியாக விளங்குபவர் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110-ன்கீழ் அறிவிப்புகளின் வாயிலாக தினம், தினம் வரங்கள் தந்து, தமிழகம் செழிக்கச் செய்யும் மாண்புமிகு அம்மா அவர்கள், இன்று நகராட்சி நிருவாகத்தின் சார்பில் முத்தான 10 திட்டங்களையும், ஊரக வளர்ச்சித் துறையில் அம்மா கைபேசி திட்டத்தினையும் அறிவித்து,

தமிழ்நாட்டு மக்களை மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைத்துள்ளார்கள். தீபாவளி, பொங்கல், கிருஸ்துமஸ், ரம்ஜான் என பண்டிகைகள் அனைத்தும், ஒருசேர, ஒரே நாளில் வந்தால் அத்துணை மக்களும் எத்தனை மகிழ்ச்சியாக இருப்பார்களோ, அப்படியொரு மகிழ்ச்சியை விதி 110—ன்கீழ் வெளியிட்டிருக்கிற அறிவிப்புகளின் வாயிலாக வழங்கியிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி மகிழ்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உழவுத் தொழில் காத்திட்ட உயிரோவியம், சோழநாடு காத்திட்ட சொல்லோவியம், சோறுடைத்த வரலாற்றை மீட்டெடுத்த காவியம், பொன்னி நதி காத்திட்ட புண்ணியம், சத்தியத்தை வென்றெடுத்த சங்கநாதம், சட்டப் போரில் சாதித்த சரித்திரம், ஏர் உழுபவன் இன்னல் தீர்த்த ஏந்தல், வறட்சி தீர்த்து வாழவைக்கும் வள்ளல், வேளாண்மை காத்திட்ட பேராண்மை! (மேசையைத் தட்டும் ஒலி) உழவர் பெருமக்கள் ஏற்றம்பெறும்வகையில் சிறந்த அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். அதிலும், 100 விவசாயிகளுக்கு வெளிநாடுகளில் கல்விச் சுற்றுலா, எண்ணிப் பார்த்திட இயலுமா, அம்மா. ஏர் இருக்கும் காலமெல்லாம் உங்கள் பேர் இருக்கும். உழவு நடக்கும் காலம் வரை, இந்த உலகம் இருக்கும் காலம் வரை உங்கள் புகழ் நிலைக்கும் தாயே! வயல் இருக்கும் காலம் வரை, வாய்க்கால் இருக்கும் காலம் வரை உங்கள் வரலாறு நிலைக்கும் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—10

ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடித்தளம் இடுவது உள்ளாட்சித் துறை. உடலில் உள்ள இரத்தத்தை ஓயாமல் சுத்திகரித்து நம்முடைய இதயம் தினசரி 7,500 லிட்டர் இரத்தத்தை பம்ப் செய்து, இரத்த நாளங்களில் பாய்ந்தோடச் செய்கிறது. ஆரோக்கியத்தையும், சக்தியையும் பாதுகாக்கும் இதயத்தின் இயக்கத்தைப் போன்றதே உள்ளாட்சித் துறை. மக்கள் பயன் அடைகின்ற வகையிலே நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் எண்ணற்ற அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்துள்ளார்கள். சென்னை மாநகர குடிநீர்த்

தேவைகளைத் தீர்க்க, தாகம் தணிக்க அறிவிப்புகளைச் செய்த தங்கத் தாரகைக்கு தமிழகம் என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருக்கிறது. துப்புரவுப் பணியாளர்களுக்கு முழுக்கால் சட்டை அளித்த மூலவரை, வள்ளல்களுக்கும் வள்ளல் என்று அவர்களின் உள்ளங்களும், இல்லங்களும் வாழ்த்துப்பா பாடுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு அம்மா கைபேசி, அன்னை அறிவித்திருக்கின்றார்கள். தமிழகத்தின் தலையெழுத்தை உயிரெழுத்தாக மாற்றக்கூடிய விதி 110—ன்கீழ், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு வெளியிட்டுள்ள அறிவிப்புகளையும் சேர்த்து, இந்த நான்கரை ஆண்டுகளில் 176 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 176—ஐ 100 ஆல் வகுத்து, இலட்சம் கோடியில் பெருக்கி வருவதைத் கூட்ட, திட்டங்களை வகுத்து, சட்டங்களை வளைத்தவர்களை மக்கள் மனதிலிருந்து கழித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ள இந்த 176 அறிவிப்புகள் ஒவ்வொன்றும் தமிழனின் வளர்ச்சிக்கான முத்துக்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியுடன் மாந்தர் வாழ வழிவகுக்கும் மரகதங்கள், துறையின் முன்னேற்றத்திற்கான இரத்தினங்கள், இன்றைய நட்சத்திரங்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வைரங்கள், நாளைய உயர்வுக்கு படிக்கட்டுகளாகும் அம்மாவின் பாசமிகு தீர்க்கமான அறிவிப்புகள்.

வேளாண்மைத் துறை, உள்ளாட்சித் துறை மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சார்பில் சிறப்பான அறிவிப்புகளைச் செய்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.